**MCOP. 176/2024**

**நாள்.18.11.2025**

**ம.சா. 2 – சேசு**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் விபத்து எவ்வாறு நடைபெற்றது, எந்த இடத்தில் நடைபெற்றது என்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்தில் இறந்த நபரின் உறவினர்களுக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சாலை இரண்டு கனரக வாகனங்கள் ஒரே நேரத்தில் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் பேருந்து எந்த இராமநாதபுரத்திலிருந்து பட்டுக்கோட்டைக்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி போனது. இருசக்கர வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. அரசு பேருந்து ஓட்டுநர் முறையாக சாலை விதிகளை பின்பற்றி வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும், இருசக்கர வாகனத்தில் வந்த நபர்தான் சாலை விதிகளை பின்பற்றாமல் பேருந்தின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டுநர்தான் காரணம் என்றும், மனுதார்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் பேருந்தின் ஓட்டுநர் காரணம் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.